2010 ஏப்ரல் 28]

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 115, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. திருநாவுக்கரசு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

115—

கால்நடை மருத்துவமனை

***61319—திரு. கே. திருநாவுக்கரசு:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதி, பூலாம்பாடியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த பூலாம்பாடியில் கால்நடை மருத்துவமனை அமைக்க தற்போது வாய்ப்பு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. திருநாவுக்கரசு.

திரு. கே. திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் அயராத உழைப்பால், தலைவர் உள்ளம்போல் உயர்ந்திருக்கின்ற வரலாற்றுச் சிறப்புமிக்க மாமன்றத்திலே, இந்தியாவிலேயே, முதன்முதலாக ஊனமுற்றவர்களை மாற்றுத் திறனாளிகள் என்றும், அவர்களுக்குத் தனி நல வாரியமும் அமைத்த மாமனித நேயம்மிக்க தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களையும், தலைவருக்கு உறுதுணையாகத் தமிழ்ச் சமுதாயத்தின் நெஞ்சங்களில் நிறைந்திருக்கும் மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் தளபதியார் அவர்களையும் வணங்கி, நெஞ்சார்ந்த நன்றி கூறி எனது வினாவைத் தொடருகிறேன்.

[2010 ஏப்ரல் 28

கடலூர் மாவட்டம், உளுந்தூர்பேட்டை சட்டமன்றத் தொகுதி, நல்லூர் ஊராட்சி ஒன்றியம், பூலாம்பாடி கிராமம் மற்றும் அகரம், சேவூர், இராமநாதபுரம், காளியாமேடு, புல்லூர், நிராமணி உட்பட 20 கிராமங்களுக்கு மேலுள்ள பகுதிகளில் சுமார் 5,000 கால்நடைகளுக்குமேல் உள்ளன. இப்பகுதியிலுள்ள கால்நடைகள் நோயால் பாதிக்கப்பட்டால், சுமார் 8 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள வேப்பூருக்குச் சிகிச்சைக்காக அழைத்துச் செல்ல வேண்டியுள்ளது. இதனால் கால்நடைகளும், பொதுமக்களும் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். எனவே, இப்பகுதியின் மையத்திலுள்ள பூலாம்பாடி கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்க, நமது அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கால்நடை பராமரிப்புத் துறை, அந்தந்தப் பகுதிகளில் உள்ள கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து அப்பகுதியில் கால்நடைக் கிளை நிலையம், கால்நடை மருந்தகம் அல்லது கால்நடை மருத்துவமனை போன்றவற்றை அமைத்துத் தருகிறது. ஒரு கிராமத்திலுள்ள கால்நடைகளின் எண்ணிக்கை 3,000-க்கு மேலும் இருக்குமானால், அங்கே கால்நடைக் கிளை நிலையமும், 10,000-க்கு மேலும் இருக்குமானால், மருந்தகமும் அதற்கு மேலும் இருக்குமானால், மருத்துவமனையும் அமைக்கப்படுகிறது. மேலும், இருக்கின்ற கிளை நிலையங்களுக்கு இடையே உள்ள தூரம் 5 கிலோ மீட்டர் அல்லது 6 கிலோ மீட்டருக்கு மேல் இருக்க வேண்டும். தினசரி சிகிச்சைக்கு வரும் கால்நடைகளினுடைய எண்ணிக்கை 40-க்குக் கூடுதலாக இருக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன ஊரிலே இந்த எண்ணிக்கை குறைவாக இருப்பதாக என்னிடம் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். கடலூர் மாவட்டம், உளுந்தூர்பேட்டை தொகுதி, நல்லூர் ஊராட்சி ஒன்றியத்தில் 3 கால்நடை மருந்தகங்களும், 7 கால்நடைக் கிளை நிலையங்களும் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. பூலாம்பாடி கிராமத்தில் கால்நடைகளின் எண்ணிக்கை அலகு குறைவாக உள்ளதால், தற்போது மருத்துவமனை அமைக்க வாய்ப்பில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2010 ஏப்ரல் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. திருநாவுக்கரசு.

திரு. கே. திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உளுந்தூர்பேட்டையில் இயங்கிவரும் கால்நடை மருத்துவமனையில் கால்நடைகளுக்காகப் பயன்படுத்தும் ஆய்வகம் மிகவும் பழுதடைந்துள்ளது. தண்ணீர் வசதி இல்லாமலும், மருத்துவமனையைச் சுற்றிச் சுற்றுச் சுவர் முழுமையாக இல்லாததால், பாதுகாப்பு இல்லாமலும், சுகாதார வசதி இன்றியும் உள்ளது. எனவே, உளுந்தூர்பேட்டையிலே உள்ள கால்நடை மருத்துவமனையைச் சீரமைத்துத் தர, நமது அரசு ஆவன செய்ய வேண்டுமாய் தங்கள்வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தங்களுடைய சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து தொகையை எடுத்து அந்த மருத்துவமனையை மேம்படுத்துவதற்கு வழிவகைகள் உள்ளன. ஆகவே, அதைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

திரு. குத்தாலம் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், குத்தாலத்தில் 1963-லிருந்து செயல்பட்டுவரும் கால்நடை மருந்தகம், 10 ஊராட்சிகள், ஒரு பேரூராட்சி ஆகிய பகுதிகளில் இருக்கக்கூடிய கால்நடைகள் பயன்பெறுகின்ற ஒரு மருந்தகம். ஒரு நாளைக்கு 200-க்கும் மேற்பட்ட கால்நடைகள் வந்து வைத்தியம் பெறக்கூடிய நிலையமாக உள்ளது. நாகை மாவட்டத்தில், அதிகமாகக் கருவூட்டல் நடைபெறும் மருந்தகங்களில் இது முதலாவதாகத் திகழ்கிறது. இது அமைந்துள்ள இடம், தற்போது வட்டத் தலைமையிடமாகத் தரம் உயர்த்தப்பட்ட இடம். இங்கு 1963-லே கட்டப்பட்ட கட்டடம் மிகவும் பழுதடைந்திருக்கின்ற காரணத்தினால், 2010-2011 ஆம் ஆண்டுக்கான சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூபாய் 20 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிருவாக அனுமதி

எதிர்பார்க்கப்படுகிறது. ஆகவே, நீண்ட நாள் கோரிக்கையாக இருக்கக்கூடிய இந்தக் கால்நடை மருந்தகத்தை மருத்துவமனையாக இந்த ஆண்டே தரம் உயர்த்தி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை முன்னுரிமை வரிசையில் வைத்து பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 116, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன், மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள்.

116—

வட்டாட்சியர் அலுவலகம்

***109045—திரு. பெ. மோகன்:**

மாண்புமிகு வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் வீட்டு வசதித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் வட்டாட்சியர் அலுவலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டுவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. மோகன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS